# சிறிலங்கா ஒரு கௌரவமிக்க நாடுதானா! அவுஸ். வெளியுறவு அமைச்சர் சந்தேகம்!

(கன்பரா)
''மனிதஉரிமைகள் அளவு கடந்து மீறப்பட்டு இரத்தக் களரியையும், படுகொலையையும் வளர்த்து வரும் சிறிலங்கா அரசு ஒரு கௌரவ மிக்க நாடுதானா என்று சந்தேகிக்கும் அளவிற்கு நடந்து கொள்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது'' என அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கரெத் சவன்ஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் செனற் சபையில் இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக செனற் சபையில் இடம்பெற்ற கருத்துப்பரிமாற்றங்களின்போது அவர் இவ்வாறு தெரிவித்
(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (18 - 12 - 1990) செவ்வாய்க்கிழமை ஓசை 293

## மண்ணெண்ணெயுடன் சென்றாலே சிகிச்சை

(மானிப்பாய்)
இரவு வேளைகளில் சிகிச்சை பெறுவதற்காக மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனைக்குச் செல்லும் நோயாளர்களிடம் மண்ணெண்ணெய் கொண்டு வந்தாலே சிகிச்சை அளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இதனால் அவசர நோயாளர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். இவ்வாறு நேற்று
(4 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு மாவட்டத்தில் மியான் குளத்தில்

# புலிகளின் அதிரடித் தாக்குதல்; 11 படை பலி; 8 பேர் படுகாயம்!

## புலிகள் தரப்பில் சேதமில்லை புலிகளால் ஆயுதங்கள் மீட்பு!

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் மியான்குளம் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலினால் சிறிலங்கா இராணுவத்தில் ஒரு அதிகாரி உட்பட பதினொரு பேர் கொல்லப்பட்டதோடு எட்டு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இவர்களிடம் இருந்து பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறாம் கட்டை இராணுவ முகாமில் இருந்து இரண்டு வாகனங்களில் புனானை இராணுவ முகாமிற்குச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போது இராணுவத்தினர் பயன்படுத்திய பஸ் வண்டியும், ஜீப்பும் புலிகளால் சேதமாக்கப்பட்டன.

இம்மோதலில் ஒரு இராணுவ அதிகாரி உட்பட பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எட்டு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். காயமடைந்த
(4 ஆம் பக்கம் பார்க்க)

## எல்.எம்.ஜி, மோட்டர் உட்பட ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மியான்குளத் தாக்குதலில் விடுதலைப் புலிகளால் இராணுவத்தினரிடம் இருந்து பலரக நவீன ஆயுதங்களும், தொலைத்தொடர்பு சாதனமும் கைப்பற்றப்பட்டன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், பொருள்கள் பற்றிய விபரம் வருமாறு:-

★ ஏ. கே. எல். எம். ஜி. -2
★ ரம் மகசின் -9

(4 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு ஒரு மில்லியன் ரூபா

## அபிவிருத்திக்கா, புனரமைப்பிற்கா? அதிகாரிகள் குழப்பம்

(யாழ்ப்பாணம்)
வடகிழக்கு மாகாணசபையின் அபிவிருத்தி நிதியில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபாவை எந்த அபிவிருத்திக்குப் பயன்படுத்துவது என்று யாழ். செயலக அதிகாரிகள் திண்டாட்ட நிலையில் உள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தாக்குதலினால் யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளும் சிதைவடைந்த நிலையில் உள்ளது. இந்த நிலையில் சுமார் ஒரு மில்லியன் ரூபாவை வடகிழக்கு மாகாண சபை அபிவிருத்தி நிதி என்ற பெயரில் அனுப்பி வைத்துள்ளது. இந்த நிதியை அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதா
(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்டத்திற்கு 33 லொறிகளில் உணவு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டத்திற்கு 33 லொறிகளில் கொழும்பிலிருந்து உணவுப் பொருள்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. கொண்டுவரப்பட்டுள்ள உணவுப் பொருள்களில் 60 வீதமானவற்றை உடனடியாக மக்களுக்குப் பகிர்ந்த
(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சிப் பூர்த்திக்கு ஆசி இவர்களுக்கு

(கொழும்பு)
சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் இரண்டு ஆண்டு ஆட்சிப் பூர்த்தியை முன்னிட்டு ஆயுதப் படையினருக்கு நல்லாசி வேண்டி பூஜைகள் இடம்பெறவுள்ளதாக ரூபவாஹினி நேற்றைய செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

## நினைவுநாளும் வெற்றிவிழாவும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு நாளும் கலும் புலி போர்க் நினைவு நாளும் எதிர்வரும் 23ஆம் திகதி வன்னிமாவட்டத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கான முன் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.
(4 ஆம் பக்கம் பார்க்க)

## சீனப்பிரதமர் லீ. பெங்கிற்கு செங்கம்பள வரவேற்பு

(கொழும்பு)
சீனப் பிரதமர் லீ.பெங்கும் அவருடைய குழுவினர் 49 பேரும் இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர். சீனப்பிரதமருக்கு கட்டுநாயக்காவிமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்
(4 ஆம் பக்கம் பார்க்க)

## சீனா - சிறிலங்கா உறவு இந்தியாவிற்கு உவப்பானதல்ல

### - பி. பி. ஸி. செய்தி விமர்சனம்

(லண்டன்)
சீனா-சிறிலங்கா அரசாங்கங்களுக்கிடையில் ஏற்படும் நெருக்கமான உறவுகள் இந்தியாவைப்பொறுத்துஉவப்பான செய்தியாக இருக்காது என நேற்றிரவு பி.பி.ஸி. தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.
(4 ஆம் பக்கம் பார்க்க)

### புதுக்குடியிருப்பு அகதி முகாம்

## அகதிகளுக்கு உணவாக மரவள்ளியும் கீரையும்

(புதுக்குடியிருப்பு)
புதுக்குடியிருப்பு அகதி முகாம்களில் உணவாக மரவள்ளிக்கிழங்கும், கீரையும் அகதிகளுக்கு வழங்கப்படுகின்றன.

தம்பலகாமத்தில் இருந்து அண்மையில் புதுக்குடியிருப்புக்கு வந்த அகதிகளுக்கு ஆரம்பத்தில் உணவாக சோறு வழங்கப்பட்டு வந்தது.
(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் வெள்ளத்தினால் 20,000 மக்கள் பாதிப்பு

அம்பாறை மாவட்டத்தில் 20,000 மக்கள் வெள்ளப் பெருக்கினால் மீண்டும் அகதிகளாகியுள்ளனர் என்றும், 1000 ஏக்கர் பயிர் செய்யும் நிலம் பழுதடைந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

அக்கரைப்பற்று, பொத்துவில், ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே வெள்ளத்தினால் 4160 குடும்பத்தைச் சேர்ந்த 20·000 அகதிகள் பாதிப்படைந்துள்ளனர்.

## விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை. யாழ்ப்பாணம். (B/886)

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட காட்டைகள் அனைத்தும் விற்பனையாகிக்கொண்டு இருக்கின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். உங்கள் தெரிவுக்குமுந்துங்கள். அனைத்தும் புதிய டிசைன்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். நல்லூர், யாழ்ப்பாணம்.

(B-1718)


## 1 வது வருட நினைவஞ்சலி



தோற்றம்
05 | 05 | 1950

மறைவு
28 | 12 | 1989

**அமரர் தம்பு நடேசு**
(கண்ணன் கூல்பார் உரிமையாளர், கொடிகாமம்)
திதி: 17-12-90

'கண்ணைப்போல் மனையாளைப் பிள்ளைகளை நேசித்தாய்
உள்ளத்தை தமிழீழ விடிவிற்காய் அர்ப்பணித்தாய்
எம்மினத்தின் விரோதிகளே உம்மைக் கொன்றதனால்
வெம்பி வெதும்பும் நாம், கொண்ட குறி தொடர்கின்றோம்,

கச்சாய் வெளி, பளை.
உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்

(R - 931)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
18 — 04 — 1969



தாயக விடிவில்
04 — 11 — 1990

### மேஜர் சஞ்சிகா
(சு. கலைச்செல்வி)

களம்பல கண்ட பெண்புலி நீ என்று பெருமைப் பட்டோம்! குளம் என கண்ணீர் சிந்தி அஞ்சலிக்கின்றோம்.

பெற்றவர் துடிக்கின்றோம், சகோதரர் தவிக்கின்றோம்! இருந்தும் பிறப்பதாய் இருந்தால் இதே அன்னையே பெற்றெடுக்கட்டும்! சிறந்த என் செல்வச் சகோதரர்களோடு பிறப்பீர் என்று சொன்னீரே! ஆசைப் பட்டபடி இறந்த நீ மீண்டும் வரவேண்டும். வெற்றிக் கனி நீ யானாலும் வேதனையோடு அஞ்சலிக்கின்றோம்!

எங்களுடைய கலைக்கோயில் நீயம்மா! ஆனால் நீயேகோயில் ஆகிவிட்டாயம்மா!

பிரிவால் துயருறும்
அப்புச்சி, அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, பெரியம்மா, மற்றும் சகோதரர், உறவினர், நண்பர்கள்.

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

(R. 935)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்-1991

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1990 டிசம்பர் 31ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:**

1. எழுதுபொருட்கள்
2. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
3. அலுவலக தளபாடம் - மரம்
4. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள், முதலியன)
5. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள். கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
6. சகலவகை ஹாட்வெயார் பெயிண்டுகள் வார்னிஷ்)
7. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
8. மின்சாரசாதனமும, உதிரிப்பாகங்களும்
9. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன.
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசயானப் பொருட்களும் கண்ணாடிப் பொருட்களும்
12. மரம
13. கட்டடப் பொருட்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு, முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால்துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், ரியூபுகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுர்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும நலன்புரி பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

**சேவைகள்:**

1. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள் கல்குலேட்டர்கள் முதலியன) திருத்தவேலைகள்
3. றிபிறியேட்டர்கள், எயர்கொண்டிசனர்கள், திருத்தவேலைகளும், பராமரிப்புக்களும்
4. ஸ்டீல் தளபாடங்களின் திருத்த வேலைகள்
5. மரத் தளபாடங்களுக்கான திருத்தவேலைகள்
6. கதிரைகள், பின்னல
7. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
8. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
9. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

**பொறியியல் சேவைகள்**

1. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
2. எலக்றிக் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
3. குடிசார் பொறியியல் வேலைகள் (கட்டிடங்கள் நிருமாணித்தலும், திருத்தவேலைகளும்)
4. எலக்றிக்கல் வயறிங்
5. நீர் விநியோக சுகாதார தாபித்தல் வேலைகளும் திருந்த வேலைகளும், குழாய் வளைத்தல் வேலைகளும்
6. இரும்பு கிறில்கள், கேற்றுக்கள் உருவமைத்தலும் தாபித்தலும்
7. கட்டடங்கள் / கட்டட சேவைகளுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையான மரத் தளபாடங்களை வழங்குதலும், பொருத்துதலும்

கடித உறையில் இடது பக்க மூலையில் 'வழங்கல்கள் / சேவைகள் - 1991' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால்மூலம் சகலவிண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் பொருளாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
   ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 150/= பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலைமனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை, சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப்புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(1) விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
(2) பெயரும் விலாசமும்
(3) தொலைபேசி இலக்கம்
(4) வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
(5) வியாபாரத்தின் தன்மை
(6) வங்கியாளர்களின் பெயர்
(7) கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்

குறிப்பு: பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து மேலதிக தகவல்கள் கோரப்படும்.

(8) பொருட்கள் 3 ஐப் பொறுத்த வரையில் பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்.

(அ) ICTAD சிஸ்டத்தின் கீழ் கட்டிடங்களை நிருமாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோ பிரதி / அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

(ஆ) இலங்கை கட்டடங்கள் திணைக்களத்துடன் பதிவு செய்துள்ள அல்லது கட்டடங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகுதிகாண் கடிதம் வைத்திருப்பவர்கள் கட்டடங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(இ) யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் ரூபா 50,000/- மும் அதற்கு மேற்பட்ட தொகைக்கு ஏதாவது ஒற்றை குடிசார் / கட்டட வேலையை செய்து முடித்தவர்கள் சம்பந்தப்பட்ட படிவம் ICTAD / ID / 02 (பிரதி)யையும் ICTAD/ID/01 யையும் ICTAD, 123, விஜயராம மாவத்தை, கொழும்பு -7 என்ற முகவரியிலிருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்க வேண்டும்.

(9) உங்கள் தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல பொருட் பொறியியலாளர்கள் கட்டக் கலைஞர்கள் ஆகியோரின் பெயர், அனுபவங்களை (பொருட்கள் 3 7 க்கு மட்டும்) தருக.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(B/1730)

## சிந்தனைக்கு

உலகம், மேற்பூச்சுக் காசைத் தங்கமென்று நம்பி விடுகிறது. அவ்வாறு அடிக்கடி ஏமாற்றம் அடைந்ததன் விளைவாய் சாதாரண செப்புக் காசைத் தவிர, வேறெதையும் அது நம்பத் தயாராக இல்லை.

— தாமஸ் கார்லைல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 18-12-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த.பெ.எண் 05

# தென் ஆசியாவிற்கு புதிய வெளியுறவுக் கொள்கை

தென் ஆசியாவில் இந்த வருடத்தின் பிற்பகுதியில் ஏற்பட்ட திடீர் அரசியல் மாற்றங்களும், சர்வதேச நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள உறவு மாற்றங்களும் வளைகுடாவில் போர் முஸ்தீபும், தென் ஆசிய நாடுகளின் வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதெனலாம்.

இந்த வருட இறுதியில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய தென் ஆசிய நாடுகளில் எதிர்பாராத ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டன. பாகிஸ்தானைப் பொறுத்து பெனாசிர் பூட்டோவின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. பூட்டோவை விட தீவிர வலதுசாரிப் போக்குடைய நவாப் ஷெரீவ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அதே போன்றே இந்தியாவில் வி. பி. சிங் அவர்களின் அரசாங்கமும் கவிழ்க்கப்பட்டது. மிகவும் சிறுபான்மைக் கட்சியான ஜனதா தள் (எஸ்) ஆட்சியில் அமர்த்தப்பட்டது. பங்களாதேஷில் இராணுவ ஆட்சியாளர் எர்ஷாத் பதவி விலகினார். முன்னாள் நீதிபதி இடைக்கால ஆட்சியாளராகப் பதவி ஏற்றுள்ளார். தேர்தல் திகதி எதிர்வரும் மார்ச் மாதம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் இவ்வாறான ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்த போது சர்வதேச உறவுகளிலும் குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மாற்றங்களும் தென்னாசியாவைப் பொறுத்தும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை விளைவித்தது. இதன் காரணமாக தென் ஆசியாவில் மாற்றங்களுக்கு உள்ளாகிய அரசாங்கங்களும் மற்றைய அரசாங்கங்களும் புதிய வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானைப் பொறுத்து அமெரிக்கா அதன் நீண்டகால நண்பனாகவே இருந்துவந்தது. அண்மைக் காலத்தில் இந்த உறவு நிலையில் சற்று முறிவு ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானின் அணு ஆயுத உற்பத்தி தொடர்பாகவே இந்த முறிவு ஏற்பட்டதாகக் கூறிக் கொள்ளப்பட்ட போதிலும் இஸ்லாமிய நாடுகளின் வளர்ச்சி அமெரிக்காவிற்கு ஏற்படுத்தும் அச்சமும், பெனாசிர் பூட்டோவின் ஆட்சிக் கவிழ்ப்புமே இதற்குக்காரணமாகும்.

மேலும், உலகம் 'பனிப் போர்' நிலையில் இருந்து விடுபட்டுள்ளமையும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மேற்கு ஐரோப்பாவினதும், அமெரிக்காவினதும் கவனம் திரும்பியமையும் இவற்றிற்கான காரணங்களாகக் கொள்ளலாம்.

இதேபோன்றே, இந்தியாவைப் பொறுத்து சோவியத் ரஷ்யா நீண்டகால நண்பனாக இருந்துவந்தபோதிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றம், சோவியத் நடந்துகொண்ட முறைகளும், இன்றைய வளைகுடாப் பிரச்சினைகளில் ரஷ்யா நடந்துகொள்ளும் முறைகளும் இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கைகளை மறு பரிசீலனை செய்யவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு தென் ஆசியப் பிராந்தியத்தில் கடந்தகாலக் கொள்கைஏற்படுத்திய தோல்வியைக்கொண்டும் முடிவுகள் எடுக்கவேண்டியுள்ளது.

பங்களாதேஷிலும் இவ்வாறான கொள்கைமாற்றங்கள் ஏற்படவேண்டியுள்ளது. இராணுவ ஆட்சியாளரான எர்ஷாத் ஏற்படுத்தியிருந்த உறவுநிலைகள் மாற்றமடைய வாய்ப்புண்டு. குறிப்பாக இந்தியாவுடனான கொள்கை நிலையில் மாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில், தென்ஆசியா நாடுகளில் ஏற்பட்ட சர்வதேச, தென்ஆசிய ரீதியான கொள்கை மாற்றங்கள் இந்த நாடுகளில் சிறிலங்காவுடனான கொள்கை மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளதெனலாம்.

அதேபோன்றே சிறிலங்காவில் தீவிரமடைந்துள்ள அரசியல் நெருக்கடிகள் சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

இவற்றின் வெளிப்பாடே இந்தியா நேற்று முன்தினம் அறிவித்த சிறிலங்காவுடனான புதிய வெளியுறவுக் கொள்கையாகும். இந்த அறிவிப்பானது சீனப் பிரதமரின் சிறிலங்கா விஜயத்துடனும், பாகிஸ்தான் செனட்குழுவின் விஜயத்துடனும், இந்திய வெளிவிவகார அமைச்சர்களின் விஜயத்துடனும், அவுஸ்திரேலியாவின் தென்னாசிய பற்றிய அக்கறையுடனும் மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகும்.

# பெற்றோர் துன்பம் அனுபவிக்க பிள்ளைகள் போராடுகிறார்கள்

- தேவர்

(பருத்தித்துறை)

''யாழ். கோட்டையிலே இன்று புலிக்கொடிபறந்து கொண்டிருப்பதற்கு முக்கிய பங்காளிகள் தென்தமிழீழப் போராளிகளே. எமது தலைவர் பிரபாகரனையும், பிரதித்தலைவர் மாத்தயாவையும் காவல்செய்பவர்களும் தென் தமிழீழ வேங்கைகளே. தென்தமிழீழத்தில் உள்ளபெற்றோர்கள தாங்கொணாத் துயரங்களையும் அல்லல்களையும் அனுபவித்துக்கொண்டிருக்க அவர்களது பிள்ளைகள் இங்கே விடுதலைப்போராட்டத்தினால் எமது மண்ணைக்காப்பதற்காகப் போராடுகின்றார்கள். எனவே தென் தமிழீழ பெற்றோர்களின் துயரங்களையும் அல்லல்களையும் போக்க நாம் அனைவரும் இணைந்து உதவிசெய்ய வேண்டும். இல்லையேல் நாம் நன்றி மறந்தவர்களாவோம்''

பருத்தித்துறை புற்றளை சித்தி விநாயகராலயத்திற்கு அருகாமையில் நடைபெற்ற கூட்டத்திலே உரையாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்தஉறுப்பினர் திரு. தேவர் இவ்வாறு குறிப்பிட்டார். கூட்டத்திற்கு சிற்றூரவைகள் பொறுப்பாளர். திரு. தயா தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய தேவர் குறிப்பிட்டதாவது;

சிங்களப் பேரினவாத இரத்தவெறி பிடித்த இராணுவத்தினரும் முஸ்லிம் படையினரும் தமிழ்த்துரோகக்கும்பல்களும் இன்று தென்தமிழீழத்தில பயங்கரகொடூரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு தென்தமிழீழ மக்களைச் சொல்லொணாக் கஷ்டங்களுக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தென்தமிழீழ மக்களும் நாங்களும் ஒரே தமிழ்க் குடும்பத்தின் அங்கத்தவர்கள். அவர்கள் அல்லலபடும் போது நாம் சும்மா இருக்கக்கூடாது. அவர்களுக்கு இயன்றளவு கூடிய உதவிகளை வழங்க வேண்டும் இன்று தென்தமிழீழ மக்கள் அச்சத்துடன் காடுகளிலும், மதகுகளின் கீழும் பயங்கர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எந்தநேரமும் எதுவும் நிகழலாம் என அச்சத்துடன் வாழ்கிறார்கள். இவர்களுக்கு சமூக சேவை நிறுவனங்களின் உதவிகள் கூடக் கிடைப்பதில்லை. இவர்களை நாம் மறந்துவிடலாமா?

1978ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்திலே ஏற்பட்ட சூறாவளிப்பாதிப்பின் போது வடபகுதியிலிருந்து பொதுமக்கள் 10 கோடி ரூபாபெறுமதியான பொருள்களை தென் தமிழீழ மக்களுக்கு வழங்கினர். ஆனால இன்றைய நிலையிலே வடபகுதியிலிருந்து 25 கோடி ரூபா பெறுமதிக்குமேலான பொருள்கள் தென்தமிழீழ மக்களுக்குப் போய்ச்சேரவேண்டும். இதற்கு எமது மக்கள் பூரண உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்க வேண்டும். இதன் மூலமே தென்தமிழீழ மக்கள் நிலங்களால் மட்டுமல்ல மனங்களினாலும் ஒன்றியவர்கள் என்பதை நாம் உலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாணவர் அமைப்பு யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு. மருசால் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அமைப்பாளர் திரு. அரசண்ணா ஆகியோரும் உரையாற்றினர். சிற்றூரவைத் தலைவர். திரு வி. சி. மூர்த்தி நன்றியுரை வழங்கினார்.

(25)

கனக. செந்திநாதன்

## கிராம வாழ்நெறிகளையும் கலைகளையும் போற்றியவர்

''பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையைப் போல இரசிகமணி கனக. செந்திநாதன் கிராம வாழ் நெறிகளையும், கலைகளையும் பெரிதும் போற்றியவர்; உந்தியவர். கிராமியக் கலைகளில் பங்கு கொண்டு அவையினர் முன்னே ஆடியவரல்ல இவர். இருப்பினும் இரசிக நிலையில் நயந்தவர்'' என அண்மையில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் குரும்பசிட்டி சன்மார்க்கசபையினர் நடாத்திய இரசிகமணியின் 13 ஆவது ஞாபகார்த்த விழாவில் பேசிய திரு. சொக்கன் குறிப்பிட்டார்.

கலாகேசரி தம்பித்துரை தலைமையில்இடம்பெற்ற இவ்விழாவில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் மகாலிங்கம், பேராசிரியர் நந்தி. கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, கவிஞர் சச்சிதானந்தன், ஏ ரி. பொன்னுத்துரை, டொமினிக் ஜீவா செம்பியன்செல்வன், செங்கை ஆழியான், நடனசிகாமணி ஆகியோர் உரையாற்றினர்.

## யாழ்ப்பாணக் கல்லூரியில் கலைமாணி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கான 1991 - 92ஆம் ஆண்டு பரீட்சையை முன்னிட்ட கலைமாணி வகுப்புக்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அடுத்த வருடம் ஜனவரி 5இல் ஆரம்பமாக இருக்கும் விரிவுரைகளில் சேர விரும்பும் மாணவர்கள் நேரில் வந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

## கோப்பாய் மக்கள் மனப்பூர்வமாக வழங்கினர்

(கோப்பாய்)

தென் தமிழீழ மக்களுக்கு நிவாரண உதவிகளை கோப்பாய்ப் பகுதிப் பொதுமக்கள் மனப்பூர்வமாக வழங்கி வருகின்றனர். விசேடமாக தனது கணவனையும், ஏழு உறவினர்களையும் வீமன்காமத்தில் இராணுவ நடவடிக்கைகளால் இழந்தஇளம்பெண்ணொருவர் மிக வறுமையுற்ற நிலையிலும் தென் தமிழீழ மக்களுக்கு தனது பங்களிப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலையிலிருந்து வவுனியா; கந்தளாய் ஊடாக பஸ்சேவை

(வவுனியா)

திருக்கோணமலையிலிருந்து வவுனியாவிற்குப்பரீட்சார்த்த பஸ்சேவை ஒன்று கடந்த மாதம் இரு நாட்கள் மட்டும் நடாத்தப்பட்டுள்ளது. திருக்கோணமலையிலிருந்து கந்தளாய் வழியாக ஹபறணையை அடைந்து, பின்னர் அங்கிருந்து மிகிந்தலை, மதவாச்சியூடாக வவுனியாவரை இந்த பஸ் சேவை இருந்து வந்தது. திருக்கோணமலை இ. போ. சபையைச் சேர்ந்த பஸ்கள் மூலம் நடாத்தப்பட்ட இச்சேவை மாங்குளம் இராணுவ முகாம் தகர்க்கப்பட்டதன் பின்பு இடை நிறுத்தப்பட்டிருந்தது. இன்னும் சில தினங்களில் மீண்டும் பயணிகள் போக்குவரத்திற்காக இந்த பஸ் சேவை இடம்பெறவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## துயர் துடைப்பு உதவிக்காக பல்கலை. கலை நிகழ்ச்சிகள்

(நமது நிருபர்)

தென்தமிழீழ மக்களின் துயர் துடைப்பு உதவிக்காக யாழ்.பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் நாளை 19 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கும், பி.ப 2மணிக்கும் கைலாசபதி கலையரங்கத்தில் கலைநிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளனர்.

இதேவேளை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், மாணவர்களும், ஊழியர்களும் தென்தமிழீழ மக்களின் துயர் துடைப்பு நிதிக்காக தமது பங்களிப்பை நிதியாக வழங்குகின்றார்கள். இதில் ஒரு மாணவன் தனது மகாபொல புலமைப் பரிசின் இருமாதக் கொடுப்பனவாகிய ஆயிரத்து நூறு ரூபாவையும் முழுமையாக செலுத்தியுள்ளார்.

## சித்திக் நாடுதிரும்பினார்

(லண்டன்)

முக்திபாகினி இயக்கத்தைக் கட்டியெழுப்பிய தலைவர்களில் ஒருவரான சித்திக் பங்களாதேஷ் திரும்பியுள்ளார் என கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சிகளைத் தூண்டி விடுகிறார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இவர் இந்தியாவில் இதுவரை இருந்தார்.

## பங்களாதேஷ் தேர்தல் மார்ச்சில்

(டாக்கா)

பங்களாதேஷில் அடுத்த வருடம் மார்ச் மாதம் 2ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பதவி விலகியதைத் தொடர்ந்து இடைக்கால அரசாங்கம் கூட்டப்பட்டதும் தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணையாளர் தேர்தலுக்கான திகதியை அறிவித்துள்ளார் 300 ஆசனங்களுக்காக நடத்தப்படும் இந்தத் தேர்தலில் விண்ணப்பங்கள் கோரும் கடைசித் திகதி ஜனவரி 10ஆம் திகதி என்றும், விண்ணப்பங்கள் திருப்பப் பெறும் திகதி ஜனவரி 21ஆம் திகதி என்றும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையில் பங்களாதேஷில் இராணுவ ஆட்சி நீங்கிய நிலையில் 19ஆவது தேசிய சுதந்திரதினத்தை நேற்றுமுன்தினம் மக்கள் குதூகலமாகக் கொண்டாடியதாகத் தெரிகின்றது.

# தமிழகக் கரையோரத்திற்கு எல்லைக் காவற் படை

(சென்னை)

இந்தியாவின் எல்லையோர மாநிலங்களில் நடைபெறும் ஆத்திரமூட்டும்விடயங்களைப் பொறுத்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது என்றும், தமிழகத்தைப் பொறுத்த வரை இலங்கைத் தமிழ் போராளிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைககளை மத்திய மாநில அரசுகள் இணைந்து மேற்கொள்ளும் என்றும் இதற்கு எல்லைக் காவற் படை பயன் படுத்தப்படும் என்றும் மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத்கான்சகாய்

- சுபோத்கான் சகாய்

நேற்று சென்னையில் செய்தியாளரிடம் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் இலங்கை அகதிகளை மனிதாபிமானத்துடன் நடத்தும் அதேவேளை போராளிகளின் எந்தச் செயலுக்கும் இந்திய மண்ணில் இடமளிக்கக்கப்பட முடியாது என்றும் கூறினார். மத்திய - மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளைமாநிலஅரசுநாளைமுதல் துவக்கும் என்றும் கூறினார்

## வைத்திய காப்புறுதி திட்டத்தில் 1இலட்சம் வரை பெற வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்கள் மற்றும் அரச ஓய்வூதியக்காரர்கள் அனைவருக்குமான "வைத்தியக் காப்புறுதித் திட்டம்", ஒன்றை அரச பொது நிர்வாக அமைச்சு சுற்று நிருபம் ஒன்றின் மூலம் சகல அரச திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் இலக்கம் 48/90 கொண்ட சுற்று நிருபத்தின்படி சகல அரச ஊழியர்களினதும் ஓய்வூதியக்காரர்களினதும் மாதாந்த சம்பளப் பணத்தில் 20 ரூபா வீதம் மாதாந்தம் காப்புறுதிக் கட்டணமாக அறவிடப்படும்.

ஊழியர் ஒருவர் நோய்வாய்ப்படும் சமயம் ஒரு தடவை அதிக பட்சமாக ஒரு இலட்சம் ரூபா ஈட்டுத் தொகையாக பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு ஏற்பட்ட நோயின் கடுமையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். ஆனால் ஒரு நபருக்கு ஒரு வருடத்தில் அதிகபட்ச தொகையாக ஒன்றரை இலட்சம் ரூபா வழங்கப்படும். (க)

### மண்ணெண்ணெய்

முன்தினம் பிரசவத்திற்காக அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்ட பெண்மணி ஒருவரிடம் மண்ணெண்ணெய் கொண்டு வராது பிரசவத்திற்காக ஏன் வந்தாய்? எனக் கேட்கப்பட்டதாம். இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளிகளுடன் கூடச் செல்வோர் கையில் மண்ணெண்ணெய்ப் போத்தலுடன் கடைகடையாக ஏறி இறங்குவதும் அன்றாடக் காட்சியாகவுள்ளது. (42)

### கிளிநொச்சி

ளிக்கும்படி கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் தற்போது அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருவது தெரிந்ததே. (49)

### சிறிலங்கா

தார்.

வெளியுறவு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் சிறிலங்காவில் இரத்தம் சிந்தப்படுகிறது. ஒன்றும் அறியாத அப்பாவிப் பொதுமக்களின் இரத்தம் சிந்தப்படுவது குறித்து நாம் கவலைப்படும் வேளையில் மனித உரிமைகளும் அங்கு மீறப்படுகின்றன. அந்நாட்டுசிறுபான்மை இனத்தினரின் எதிர்காலம் பற்றிய சந்தேகமும் இதனால் எமக்கு ஏற்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்காவில் அரசாங்க இராணுவத்தினர் இழைத்து வரும் அநீதிகளைக் கண்டித்து குரல் எழுப்புவதில் சென்றுக்கும் அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கும் இடையில் எந்தவித வேறுபாடான கருத்தும் இல்லை எனவும் வெளியுறவு அமைச்சர் கரெத் ஈவன்ஸ் தெரிவித்தார்.

## பட்டாசுடன் வீரம்: காலுக்குப் பழுது

சிறுவர்கள் கொளுத்தி வைத்த பட்டாசுடன் தனது வீரத்தைக் காட்ட முயன்ற இளைஞர் ஒருவரின் கால் சிதறிய சம்பவம் குருநகரில் இடம் பெற்றது.

நேற்று மாலை குருநகரில் சிறுவர்களால் கொளுத்தி வீசப்பட்டிருந்த பட்டாசை ச தர்மதாஸ் என்ற 21 வயது இளைஞர் அணைக்க முற்பட்டபோது அந்தப் பட்டாஸ் வெடித்தது. இதனால் அவருடைய குதிக்கால் சிதறிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (லோ)

### அபிவிருத்திக்கா

அல்லது இராணுவ நடவடிக்கையால் அழிவடைந்த பகுதிகளை புனரமைப்புச் செய்வதற்குப் பயன்படுத்துவதா என்று யாழ் செயலக உயர் அதிகாரிகள தீவிரமாக ஆலோசனை செய்து வருகின்றனர்

மேற்படி ஒரு மில்லியன் பணத்தைக் கொண்டு பெரிய அளவிலான எந்த ஒரு அபிவிருத்தித் திட்டத்தையும் ஆரம்பிக்க முடியாது என்றுசெயலகதிட்டமிடல்அதிகாரிகள் கருதுகின்றனர். எனினும் இந்த நிதியைப் பயன்படுத்தி ஏதாவது இறங்குதுறைப் பகுதிகள் புனரமைப்புச் செய்யப்படலாம் என்று செயலகத்தில் இருந்து இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த வகையில் அராலித்துறைப் பகுதி மேற்படி புனரமைப்புக்காக தெரிவு செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி தொகை நிதி நீண்ட கால இடைவெளியின் பின் யாழ். மாவட்டத்திற்கு அபிவிருத்தி என்ற பெயரில் அரசு அனுப்பிய நிதி என்பது குறிப்பிடத்தக்கது (க)


## அரசாங்க அறிவித்தல்
## சுகாதார சேவைகள்

கோப்பாயில் தற்காலிகமாக இயங்கி வரும் மார்பு நோய் சிகிச்சை நிலையம் இல. 51, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மாறறப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,
17.12.90 யாழ்ப்பாணம். (B-1737)


# அமெரிக்காவுக்குப் பெற்றோல்! எமக்குப் பாலஸ்தீனம்!!

- சதாம் உசைன்

(பக்தாத்)

அமெரிக்காவிற்கும் ஈராக்கிற்கும் இடையிலான எத்தகைய பேச்சுவார்த்தையிலும் பாலஸ்தீனம் பற்றிய பிரச்சினை முதன்மையானதாகக் கருதி விவாதிக்கப்படல் வேண்டும் என்று ஈராக் வலியுறுத்தியுள்ளது. அமெரிக்காவிற்கு பெற்றோலிய எண்ணெய் எவ்வளவு முக்கியமோ அதே போல் ஜெருசலேம் தமக்கு முக்கியமானது என்று சதாம் உசையின் கூறியுள்ளார்.

## கொலைக் குற்றவாளிகள் மூவருக்கு மரணதண்டனை

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் கொலைக் குற்றங்கள் புரிந்த மூன்று கொலைஞர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

வதிரியைச் சேர்ந்த தவம் என்பவருக்கு, அப்பகுதியைச் சேர்ந்த சிவபாக்கியம் (70) என்ற வயோதிபப் பெண்ணைக் கத்தியால் குத்திக் கொலை செய்தமைக்காக நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் நெல்லியடியில் வைத்து மரண தண்டனை வழங்கப்பட்டது.

இதேதினம் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த சமரபாகு என்பவரைக் காணிப் பிரச்சினை காரணமாக கத்தியால் குத்திக் கொலை செய்ததற்காக கி. அருமைத்துரை, குணசேகரம் ஆகிய இருவருக்கும் உடுப்பிட்டியில் வைத்து புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது. (மு)

## யாழ். தொழில்நுட்ப அதிபருக்கு தேர்வுத் திகதி நிர்ணயிக்கவும் தெரிவு செய்யவும் அதிகாரம்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்கு அடுத்த ஆண்டுக்கான மாணவர்களை தெரிவு செய்வதற்கும் இவ்வாறு தெரிவு செய்யும் திகதிகளை நிர்ணயிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரம் வழங்கப்பட்டமை குறித்து தொழில்நுட்பக் கல்லூரிஅதிபர் திரு. எஸ். இராஜேந்திரா கூறுகையில் எதிர்வரும் 28ஆம் திகதி தாம் புதிய வகுப்புகளுக்கான மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் இறுதித் திகதியாக நிர்ணயித்திருப்பதாகவும் புதிய வகுப்புக்களில் சேரவிரும்பும் மாணவர்கள் தம்முடன் தொடர்பு கொள்வதுடன் மாதிரி விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக்கொள்ளும் படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் தொழில்நுட்பக் கல்லூரியில் பாட நெறிகளில் விரிவுரையாற்றக்கூடிய தனிப்பட்ட விரிவுரையாளர்கள் விருப்பமிருப்பின் உடனடியாக தம்முடன் டிசம்பர் 28ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார். (லோ)

### சீனப்பிரதமர்

கப்பட்டது. இதன்பின் செய்தியாளரிடம் பேசிய சீனப்பிரதமர் ஒரு நாட்டின் உள் நாட்டுப் பிரச்சினையில் மற்றைய நாடு தலையிடுவதை சீனா எதிர்க்கின்றது என்று தெரிவித்தார்.

### புலிகளின்

வர்கள் காயங்களுடன் ஓடிவிட்டனர். புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இரண்டு வாகனங்களில் சென்றுகொண்டிருந்த இருபது இராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் தாக்குதலுக்குள்ளானதாகவும் இதில் ஒரு அதிகாரி உட்பட ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், எட்டுப் பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்தது.

அதேவேளை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி. பி ஸி. செய்தி வெளியிடுகையில் ஒரு ஜீப்பிலும் பஸ்ஸிலும் இராணுவத்தினர் வந்து கொண்டிருக்கையில் முதலில் வந்த ஜீப் வண்டி புலிகளின் கண்ணி வெடியில் சிக்கியதாகவும் அதைத் தொடர்ந்து பஸ்ஸில் இருந்து இராணுவத்தினர் இறங்கியபோது அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தது அதேவேளை இத்தாக்குதலில் பத்துவிடுதலைப் புலிகள் பங்குபற்றியதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் குறிப்பிட்டன.

இத்தாக்குதல் பற்றி ஏஜென்சி செய்திகள் மேலும் குறிப்பிடுகையில், இத்தாக்குதல் இழக்கு சிறிலங்கா இராணுவத்தினரின் முழுமையான கட்டுப்பாட்டில் இல்லை என்பதை உணர்த்தியுள்ளதாகவும் தெரிவித்தது.

### எல். எம். ஜி

- ★ 60 எம். எம். மோட்டர் -1
- ★ 60 எம். எம். மோட்டர் ஷெல் -18
- ★ ரீ 56-2 ரக துப்பாக்கி -5
- ★ ரீ 81 ரக துப்பாக்கி -2
- ★ ஐ. எம். ரவைகள் -1267
- ★ ரீ 81 துப்பாக்கி இரனெட் -2
- ★ ஜே ஆர் இரனெட் -5
- ★ மொபைல் தொலைத் தொடர்பு சாதனம் -1

## கட்டு நிதி வந்தது

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படாதிருந்த நவம்பர் மாதத்திற்குரிய கட்டு நிதி நேற்று வந்து சேர்ந்துள்ளது. (மு)

### அகதிகளுக்கு

ஆனால் இப்போது முல்லைத்தீவில் அரிசி, மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினால் ஆறாம் மாதமே அகதிகளாக வந்து தங்கியிருக்கும் அகதிகளுக்கே மரவள்ளிக் கிழங்கும் கீரையுமே உணவாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தம்பலகாமத்தில் இருந்து வந்தவர்கள் உணவுக்கு அலைந்து திரிகின்றனர்.

ஒட்டுசுட்டானிலும் இரண்டு குடும்பங்கள் மதிய உணவாக பப்பாசிக்காய் அவித்து உண்பதை நேரில் பார்க்கக் கூடியதாகவும் இருந்தது.

முல்லைத்தீவில் உலர் உணவுப் பொருள்கள் எதுவும் இல்லாமல் இதனை அரசாங்கமோ, அரசு சார்பற்ற நிறுவனங்களோ கருத்தில் கொள்ளாத விடத்து நிரந்தர வாசிகளும் சரி, இடம் பெயர்ந்தவர்களும் சரி பட்டினிச்சாவை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். (58)

### நினைவு நாளும்

இதே தினத்தன்று தமிழீழ விடுதலைப் புலிகளின்அதிகார பூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் விசேட பதிப்பொன்றும் வெளியிடப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பத்திரிகையில் மாங்குளம் முகாமில் கைப்பற்றப் பட்ட ஆயுதங்களின் முழு விபரமும் அந்த முகாம் கைப்பற்றப் பட்டபொழுது வீரமுடன் போராடி வீர மரணம் அடைந்த வீரர்களின் விபரமும் வெளிவர உள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (லோ)

## சிறுமி காலை இழந்தார்

(மூதூர்)

மூதூரில் அமைந்துள்ள தெகிவத்தை என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கிய சிறுமி ஒருவர் தனது காலொன்றை இழந்துள்ளார்.

கடந்த எட்டாம் திகதி காலை 9 மணியளவில் மூதூரில் உள்ள தெகிவத்தை என்னுமிடத்தில் பொருள்கள் வாங்கச் சென்ற செல்லையன் மாலினி (வயது 11) என்ற சிறுமியே 6ஆம் கொலனியில் சிறிலங்கா இராணுவத்தினர் வைத்த மிதிவெடியில் சிக்குண்டு தமது காலை இழந்தவராவர். (மூ)

## அபிஷேகமும் தீக்குளிப்பும்

(கொழும்புத்துறை)

நாடு அமைதி, சமாதானம், சுபீட்சம்பெறவும் நம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மண்மீட்புப் போராட்டத்தில் வெற்றிபெறவும், மக்கள் விடிவிற்காகவும் அபிஷேகத்துடன் சேர்ந்த தீக்குளிப்பு நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு இணுவில் அருள்மிகு சிவகாமி அம்மன் கோவிலில் நடைபெற உள்ளது. (24)

### சீனா–சிறிலங்கா

மேலும் பி. பி. ஸி. தனது செய்தி விமர்சனத்தில் 1987 ஆம் ஆண்டு சிறிலங்காவிற்கு வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை அடுத்து சிறிலங்கா வரும் முக்கிய அரசியற் தலைவர் லீப் பெங் என்றும் தெரிவித்தது. சிறிலங்கா தொடர்ந்தும் இந்திய விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கும் அதேவேளை சீனாவிடம் இருந்து பெருமளவில் விமான கடற்படைக்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்வதும் இந்தியாவிற்கு எரிச்சலை உண்டு பண்ணும் விடயமாக இருக்கும் போதும் இந்தியா தனது உள்நாட்டுப் பூசல்களில் மூழ்கியிருப்பதால் இவ்விடயத்தில் தற்பொழுது பெரியளவில் அக்கறை காட்டவில்லை எனவும் தெரிவித்ததோடு தொடர்ந்து அவ்வாறே இருக்கும் எனவும் எண்ணக் கூடாது எனவும் தெரிவித்தது.

அதேவேளை சீனாவுடன் உறவை வளர்த்துக் கொண்டால் எதிர்காலத்தில் இந்தியாவில் தங்கி நிற்கவேண்டி ஏற்படாது என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கருதுவதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.